## பெற்றோர் இணைப்பு என்பது என்ன ?

பெற்றோர் இணைப்பு என்பது நிவ் ஸவுத் வேல்ஸில் வாழுகின்ற 0-18 வயதுடைய பிள்ளைகளின் பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தொலைபேசி அறிவுரை ஆலோசனை, தகவல் மற்றும் சிபாரிசு சேவையாகும்.

பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் மாநிலத்தின் எப்பகுதியிலிருந்தும் பெற்றோர் இணைப்பை எமது இலவச தொலைபேசி எண் 1300 1300 52 இல் அழைக்கலாம்.

விடுமுறை நாட்கள் உட்பட நாளாந்தம் 24 மணி நேரமும் எமது சேவை கிடைக்கும்.

உயர் பயிற்சி பெற்ற, ஊதியம் பெறும் அறிவுரை ஆலோசகர் குழுவினரால் அனைத்து அழைப்புகளுக்கும் பதிலளிக்கப்படும். எமது அறிவுரை ஆலோசகர்கள் பலவிதமான சமூக சேவை, உளவியல் மற்றும் சமூக நலப் பின்னணிகளையும், பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு குடும்பங்களுக்கு உதவுவதில் பல வருடகால அனுபவத்தையும் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

பெற்றோர் இணைப்புக்கான அழைப்புகள் அனைத்தும் இரகசியமானவை.

அனைத்து பராமரிப்பாளர்கள், குடும்பங்கள் மற்றும் வாழ்க்கைத் தொழிலர் போன்றவர்களுக்கும், அவர்கள் எத்தகைய கலாசாரப் பின்னணியைக் கொண்டவர்களாக இருப்பினும் எமது சேவை கிடைக்கும். தாய்மார்கள், தந்தையர், பாட்டன் பாட்டி, மாற்றான் பெற்றோர், நன்பர்கள், உறவினர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் இத்துறையிலுள்ள பணியாளர்களுடன் நாம் அடிக்கடி வேலை செய்வோம்.

மண்டரின், கண்டனீஸ், வியட்னாமீஸ் மற்றும் ஸ்பனிஷ் அறிவுரை ஆலோசகர்கள் தற்போது எம்மிடமுள்ளனர்.

## எதற்காக பெற்றோர் இணைப்பை பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர் அழைக்கலாம்?

பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர், பெற்றோர் இணைப்பை பிள்ளை வளர்ப்பு தொடர்பான விடயங்களை கலந்தாலோசிக்க அழைக்கலாம். சில சமயங்களில் அவர்கள் பொது விவகாரங்கள் தொடர்பான தகவல்களைப் பெறவும் அல்லது உள்ளூர் சேவைகளைப் பற்றி அறியவும் அழைப்பர்.

பிள்ளைகளின் நடத்தை, வளர்ச்சி மற்றும் குழந்தைப்பருவத்திலும் வாலிபப் பருவத்திலுமுள்ள சகல படிநிலைகளிலுமான உணர்வுரீதியான தேவைகள் போன்ற பலதரப்பட்ட பிள்ளை வளர்ப்பு தொடர்பான விடயங்களில் பெற்றோர்களுக்கு எம்மால் உதவ முடியும்.

**பேற்றோர் இணைப்பினால் செய்ய முடியாதவை யாது?**

பெற்றோர் இணைப்பிலுள்ள அறிவுரை ஆலோசகர்கள், சட்ட ஆலோசனை அல்லது மருத்துவ ஆலோசனை வழங்க தகுதி பெற்றவர்கள் அல்லர்.

உங்கள் பிள்ளையின் உடல்நலம் பற்றி நீங்கள் கவலை கொண்டால், உங்கள் உள்ளூர் வைத்தியரையோ, நேரடி சுகாதார தகவல் இணைப்பை 1800 022 222 இலோ, உங்கள் உள்ளூர் வைத்தியசாலையையோ தொடர்பு கொள்ளுங்கள், அல்லது அவசரகால இலக்கம் 000 ஐ அழையுங்கள்.

வேறு பல உதவி இணைப்புகளுக்கான இணைப்புச் சுட்டிகள் இந்த இணையதளத்தில் உள்ளன.

**எம்மைத் தொடர்பு கொள்வது எப்படி?**

1300 1300 52 ஐ நீங்கள் நாளாந்தம் 24 மணி நேரம் 7 நாட்களும் அழைக்கலாம்.

பெற்றோர் இணைப்பு மற்றும் பிள்ளை வளர்ப்பு பற்றிய பொதுவான ஐயங்களை அறிய info@parentline.org.au எனும் மின்னஞ்சல் முகவரி மூலம் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். மின்னஞ்சல் மூலம் பதில் கிடைப்பதற்கு 2 – 4 நாட்கள் வரை செல்லும்.

எமது இணையதளத்தை www.parentline.org.au இல் தரிசிக்கவும்